# மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசமும் யுத்தத்திற்குப் பின்னரான சூழலும் - சமூகவியல் நோக்கிலான ஆய்வு


ஆய்வுச் சுருக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரைப் பிரதேசத்தின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்திகள், சமூக சூழ்நிலைகள் பற்றி எடுத்துக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். படுவான்கரைப் பிரதேசம் மொழிவழக்கு, பண்பாடு, கலை, கலாசார பாரம்பரியங்கள், சடங்கு முறைகள் சார்ந்து தனித்துவமானதாகும். யுத்தம் நிலவிய காலத்தில் த.வி.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசம் 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பூரணமாக மீட்கப்பட்டது. இப்பிரதேசத்தின் யுத்தத்திற்கு முன்னரான சூழலும் பின்னரான சூழலும் வேறு வேறானவையாகும். யுத்தத்திற்குப் பின்னர் பாலம் அமைத்தல், பிரதேசசபைக் கட்டடங்கள், மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வீட்டுத்திட்டங்கள் என குறிப்பிடத்தக்க அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனாலும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்பதனால் இவ் அபிவிருத்தித்திட்டங்கள் மேலும் முன்னெடுக்கப்படவேண்டிய தேவை உள்ளது. மண்முனைப்பால அமைவு மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்துள்ளபோதிலும் படுவான்கரைப் பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டு, ஒழுக்க, விழுமியங்கள் சீர்குலைந்துவிடும் என்ற எண்ணம் இப்பிரதேசத்திலுள்ள 75சத வீதமான மக்களிடம் உண்டு. யுத்த காலத்திற்குப் பின்னரான சமூகச்சூழல் பல வகையிலும் சிக்கலுள்ளதாகவே மாறியுள்ளது. மது அருந்தும் பழக்கத்திற்கு ஆட்படும் நிலை அதிகரித்துள்ளதுடன் தவறான இணையப்பாவனை காரணமாக ஒழுக்கச் சீர்கேடுகளும் மேலோங்கிக் காணப்படுகின்றன. பெண்களின் வெளிநாட்டுப் பயணமும் சிக்கலுள்ளானதாகவே காணப்படுகின்றது. யுத்தகாலத்தில் கல்வியையும் பொருளாதார வளத்தினையும் இழந்த மக்கள் இன்று கூலித்தொழிலாளர்களாக தொழில்தேடி அலைய வேண்டிய நிலையும் தற்போது காணப்படுகின்றது. இச்சூழ்நிலையினை இவ்வாய்வினூடாக எடுத்துக் கூறுவதனால் யுத்தம் முடிந்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில் படுவான்கரைப்பிரதேச மக்களின் நிலை, அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் என்பவை பற்றிய புரிதலை எட்டமுடியும்.



திறவுச் சொற்கள் - படுவான்கரை, கூலித்தொழிலாளர்கள், அபிவிருத்தி முன்னெடுப்பு